இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 08-02-2025

# மனித உரிமை மீறல் மட்டுமல்ல...

அமெரிக்காவில் இருந்து கை, கால்களில் விலங்கிட்டு இந்தியர்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு இருப்பது இந்த நூற்றாண்டின் மாபெரும் மனித உரிமை மீறல் ஆகும். 'இது புதிதல்ல' என்று ஒன்றிய பாஜக அமைச்சர் ஜெய்சங்கர் சொல்வது அவர் எந்த நூற்றாண்டு மனிதர் என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

**கோபத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தக் கூடிய இந்த விவகாரத்தில் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அளித்துள்ள பதில் பொறுப்பற்ற தன்மையாக - இயந்திரத்தனமாக இருக்கிறது. "அமெரிக்காவில் இருந்து இந்தியர்கள் திருப்பி அனுப்பப்படுவது புதிது அல்ல" என்று சொல்வதற்கு அவமானமாக இல்லையா?**

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக ட்ரம்ப் வந்ததில் இருந்து, சட்டவிரோதக் குடியேற்றங்கள் குறித்து அதிகமாகப் பேசி வருகிறார். அமெரிக்காவில் முறையான ஆவணங்கள் இல்லாமல் வசித்து வந்ததாகச் சொல்லி கைது செய்து ராணுவ விமானத்தில் அனுப்பி வைத்திருக்கிறது அமெரிக்கா. அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து பிப்ரவரி 5ஆம் தேதியன்று கிளம்பிய ராணுவ விமானம், பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் வந்து சேர்ந்துள்ளது.

குஜராத்தைச் சேர்ந்த 33 பேர், அரியானாவைச் சேர்ந்த 33 பேர், பஞ்சாப்பைச் சேர்ந்த 30 பேர், உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த 3 பேர், மகாராஷ்டிராவைச் சேர்ந்த 3 பேர், சண்டிகரைச் சேர்ந்த 2 பேர் என மொத்தம் 104 பேர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

அமெரிக்க அரசியலுக்குள் நாம் செல்ல விரும்பவில்லை. ஆனால் இவர்கள் கைகளில் விலங்கிட்டும், கால்களில் சங்கிலியால் பிணைக்கப்பட்டும் அமெரிக்காவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த வீடியோ காட்சிகளை எக்ஸ் தளத்தில் பதிவிட்ட அமெரிக்க எல்லைக் காவல் படையின் தலைவர் மைக்கேல், "சட்டவிரோதமாகக் குடியேறிய ஏலியன்களை இந்தியாவுக்கு வெற்றிகரமாகத் திருப்பி அனுப்பி விட்டோம். ராணுவ விமானத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய நாடுகடத்தல் இதுவாகும்" என்று சொல்லி இருக்கிறார்.

"அமெரிக்க அதிகாரிகள் எங்கள் கைகளில் விலங்கு பூட்டியும், கால்களை சங்கிலியால் பிணைத்தும் விமானத்தில் ஏற்றினார்கள். விமானத்தில் நாங்கள் எங்களது இருக்கையில் இருந்து நகரக் கூட அனுமதிக்கவில்லை. கழிப்பறை செல்வதற்குக் கூட கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. அப்படி கழிப்பறை செல்லும் போது கூட கைவிலங்கும், கால் சங்கிலியும் அகற்றப்படவில்லை. கழிப்பறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க விமானத்தில் நாங்கள் எதையும் சாப்பிடவோ குடிக்கவோ இல்லை. விமானம் அமிர்தசரசில் தரையிறங்கிய பிறகு கைவிலங்கு மற்றும் கால் சங்கிலி அகற்றப்பட்டது. அதன்பிறகுதான் எனக்கு உணவு வழங்கப்பட்டது" என்று பஞ்சாப்பை சேர்ந்த சுக்பால் சிங் சொல்லி இருக்கிறார்.

குஜராத்தைச் சேர்ந்த 29 வயது பெண் குஷ்பு படேல், அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டவர் ஆவார். அவரது சகோதரர் அருண் அளித்த பேட்டியில், " எனது சகோதரி சுற்றுலா விசாவில் சென்றார். இப்போது திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவில் இருந்து அமிர்தசரஸ் வரும் வரை அவர் கையில் விலங்கு போட்டு வைத்திருந்துள்ளார்கள். அவர் இப்போது பேச முடியாத நிலையில் இருக்கிறார்" என்று சொல்லி இருக்கிறார். இதை வாசிக்கும் போதே உடல் நடுங்குகிறது. அந்தக் காட்சிகள் அச்சம் தருகிறது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தங்களது கடும் கண்டனத்தை பதிவு செய்தன. உடனடியாக இது குறித்து விவாதம் நடத்த சபாநாயகர் ஓம் பிர்லா அனுமதிக்கவில்லை. 'மனிதர்கள் கைதிகள் அல்ல' என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் எழுப்பினார்கள்.

மாநிலங்களவையில் திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பி கேள்விகள் எழுப்பிய நிலையில் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் என்ன பதில் அளித்துள்ளார் தெரியுமா? "சட்ட விரோதமாகக் குடியேறிய இந்தியர்களை அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பப்படுவது புதிது அல்ல. மீண்டும் சொல்கிறேன்.. இது புதிது அல்ல. பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை 15 ஆயிரத்து 756 பேர் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். இந்தப் பணிகளை அமெரிக்க குடியேற்றம் மற்றும் சுங்க அமலாக்கப்பிரிவு அதிகாரிகள் செய்து வருகிறார்கள். அமெரிக்க விமானம் மூலம் நாடு கடத்தப்படுவதற்கான நிலையான செயல்பாட்டு நடைமுறை கடந்த 2012 முதல் அமலில் உள்ளது. இதில் பெண்கள், குழந்தைகள் கிடையாது. இந்தப் பயணங்களின் போது மருத்துவத் தேவைகள் கவனிக்கப்படுகிறது. கழிவறை செல்ல அனுமதிக்கப்படுகிறது. இது அனைத்து விமானங்களுக்கும் பொருந்தும். இந்த நடைமுறை தான் கடந்த 5ஆம் தேதியன்று அனுப்பி வைக்கப்பட்டவர்களுக்கும் கடைப்பிடிக்கப்பட்டன" என்று சொல்லி இருக்கிறார்.

"ராணுவ விமானத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய நாடு கடத்தல் இதுவாகும்" என்று அமெரிக்க அதிகாரி சொல்கிறார். ஆனால் இது புதிதல்ல என்கிறார் இந்திய அமைச்சர்.

மனிதாபிமானம் இல்லாமல், மனித உரிமை மீறலாக ஏன் அழைத்து வரப்பட்டார்கள் என்று கேட்டால், இது புதிதல்ல, இப்படித்தான் அமெரிக்க சட்டம் சொல்கிறது என்கிறார் இந்திய ஒன்றிய அமைச்சர்.

இப்படி அனுப்பி வைக்கப்பட இருக்கிறார்கள் என்று தெரிந்ததும், இந்திய அரசு அமெரிக்க அரசிடம் பேசியதா? இந்தியப் பிரதமர் மோடியும், அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் நண்பர்கள் என்பது நாடு அறிந்தது. இதைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதியிடம் இந்தியப் பிரதமர் பேசினாரா? பேசியிருக்க வேண்டாமா?

"இந்தியர்களை கண்ணியமாக அழைத்து வர இந்திய விமானம் அனுப்பி வைக்கப்பட்டிருக்க வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சொல்வதில் நியாயம் உண்டு.

**இது வெறும் மனித உரிமை மீறல் மட்டுமல்ல, இந்தியர்கள் அவமதிக்கப்பட்டுள்ளார்கள். இதன் மூலமாக இந்தியா அவமதிக்கப்பட்டுள்ளது.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.2.2025) திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில், 1304.66 கோடி ரூபாய் செலவில் 23 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 309.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல்!

## இன்று வாக்குகள் எண்ணிக்கை!

### பலத்த கண்காணிப்புப் பணிகள்!

*ஈரோடு, பிப்.8 -*

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன. ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கான இடைத் தேர்தலை கடந்த ஜனவரி 7ம் தேதி தேர்தல் ஆணையம் அறிவித்தது. இந்த தேர்தலில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் ஆண் வாக்காளர்கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

வாக்குப்பதிவு 5.2.2025 அன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், வாக்குப் பெட்டிகள் அரசியல் கட்சியின் வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டன. 24 மண்டல அதிகாரிகள் ஒவ்வொரு வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று, வாக்குச் சாவடி முதன்மை அலுவலர்களிடம் இருந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை பெற்றனர்.

பின்னர் ஜிபிஎஸ் கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இதில் கடைசி வாகனம் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு வந்து சேர்ந்தது.

அதைத்தொடர்ந்து, அங்கு உள்ள 'ஸ்டிராங் ரூமில்' வாக்குச் சாவடி வாரியாக இயந்திரங்கள் அடுக்கி வைக்கப்பட்டு, தேர்தல் பொதுபார்வையாளர் அஜய்கு மார் குப்தா, மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த், ஈரோடு எஸ்பி ஜவகர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது.

தொடர்ந்து வாக்கு எண்ணிக்கை மையத்தில், 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்காணிப்பு பணிகள் மேற் கொள்ளப்படுகிறது. முதல் அடுக் கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியை சுற்றியும் மத்திய தொழிற் பாதுகாப்பு படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப் படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீசாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி 78 சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு, கட்டுப்பாட்டு அறையில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வாக்கு எண்ணிக்கை இன்று (8ஆம் தேதி) காலை 8 மணிக்கு நடைபெறுகிறது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்பட உள்ளன. இப்பணியில் மொத்தம் 51 பேர் ஈடுபட உள்ளனர்.



முதல்வர் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சுவதும், பிஞ்சு உள்ளங்கள் வரிசையாக நின்று வாஞ்சையுடன் மலர்க் கொத்து வழங்கி மகிழ்வதும், நெஞ்சை அள்ளும் நிகழ்வாகும் !

## வங்கிகளின் குறுகிய கால கடனுக்கான 'ரெப்போ' வட்டி விகிதம் குறைப்பு!

*புதுடெல்லி, பிப். 8 -*

வங்கிகளின் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை, 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரிசர்வ் வங்கி குறைத்துள்ளது. இதன்மூலம் வீடு, வாகனக் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைய வாய்ப்புள்ளது.

ரெப்போ விகிதம் என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் கடனுக்கு விதிக்கப்படும் வட்டி விகிதமாகும். இருமாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு கூடி, ரெப்போ விகிதம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது வழக்கம்.

இந்த நிலையில், ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநரான சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் நிதிக் கொள்கைக் குழு ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

அதன் தொடர்ச்சியாக 5 ஆண்டுகளுக்குப் பிறகு ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 6.5 சதவீதமாக இருந்த ரெப்போ வட்டி, தற்போது 0.25 புள்ளிகள் குறைக்கப்பட்டு 6.25 சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார்.

கடைசியாக கடந்த 2020 மே மாதம் ரெப்போ வட்டி விகிதம் 40 புள்ளிகள் குறைக்கப்பட்டு 4 சதவிகிதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



## தலைமைப் பண்புகளின் தனிக்குணம் வாய்த்திருக்கிறது உதயநிதிக்கு!

துணை முதலமைச்சர்
உதயநிதி ஸ்டாலின் அவர்களை
நானும் மகன் மதன்கார்க்கியும்
முகாம் அலுவலகத்தில்
சந்தித்து மகிழ்ந்தோம்

அந்த வயதில் அவர் தாத்தா
அடைந்த நிதானத்தை
இந்த வயதில்
உதயநிதி அடைந்திருக்கிறார்

பதற்றப்படாத உடல்மொழி,
அவசரம் இல்லாத வாக்கியங்கள்,
புன்னகையில்
நனைந்து வரும் வார்த்தைகள்,
எதிராளியைப்
பேசவிட்டுக் கேட்கும்
பெருந்தன்மை,
சக மனிதர்மீது அக்கறை
இவையெல்லாம்
தலைமைப் பண்புகளின்
தனிக் குணங்கள்

வாய்த்திருக்கிறது
உதயநிதிக்கு

வாழ்த்தி
விடைகொண்டோம்

**- கவிப்பேரரசு வைரமுத்து**